# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-5 | Date | : 04.03.2025 |
| Case No. | : O.S. 118/2020 | Nationality | : Indian |
| Name | : பிரபாகரன் | Religion | : |
| Father's/Husband's Name | : கோவிந்தராஜன் | Age | : 46 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.5</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சி ராகவன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். சரோஜா எனக்கு என்ன உறவுமுறை என்றால் தூரத்து உறவினர் ஆவார். நான் கோமதி பெயரில் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் அனுபவத்தில் உள்ள பெரம்பாயி அம்மன் கோவில் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த கோவில் எனது பெரியப்பா நாராயணசாமி பெயரில் உள்ளது. அந்த வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு எண் யாருக்கு தெரியும் என்றால் எனது அண்ணனுக்குதான் தெரியும். 10 நபர்கள் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். கோமதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் மாமா மச்சான் உறவுமுறை பழைய

சொந்தமாகும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொன்னது என்றால் அது எனக்கு தெரியாது. நிரூபண வாக்குமூலம் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்பதும் தெரியாது என்றால் வழக்கறிஞருக்குதான் தெரியும். நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். சரோஜா எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் சரோஜாவுக்கும் கோமதிக்கும் பிரச்சனை அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 21.04.1933 ம் தேதி சரஸ்வதியம்மாள் காசியம்மாளுக்கு விற்பனை செய்துவிட்டதை திருப்பி கேட்டதால் அவர்கள் இருவருக்கும் பிரச்சனை. என்ன சொத்து விற்பனை செய்யப்பட்டது என்றால் வீடு மற்றும் கொல்லை விற்பனை செய்யப்பட்டது. 36 குழி சொத்தில் பாதி சொத்தை விற்பனை செய்தார். சரஸ்வதியம்மாளின் வாரிசுதான் கோமதி என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் நான் தாக்கல் செய்த வழக்கில் காசியம்மாளின் வாரிசு சரோஜா எனக்கு சாதகமாக சாட்சி சொல்லியுள்ளார் என்பதால் அவருக்கு அனுசரணையாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.03.04 18:03:24 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.